மலர் - 27 / இதழ் -02 / பிப்ரவரி 2026
Volume -27/Issue - 02 /February 2026
தமிழ் மாத இதழ் /தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

# வளரும் விண்ணரசு
## VALARUM VINNARASU

அவர்களை அநேக அடி அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து...
நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்.

(அப். 16:23,25)



# பொதுச்சேவகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர சகோதரிகளுக்கு,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்!

இந்தப் புதிய ஆண்டில் பெரியகுளத்தில் உள்ள சிஎஸ்ஐ தூய பேதுரு ஆலயத்தில் அருட்பணியாளர் அர்ப்பணிப்பு ஆராதனை நடைபெற்றது. ஆயர் அருள்திரு.ஈசாக்கு அவர்களுக்கும், இதனை ஒழுங்கு செய்த திரு. கிறிஸ்டோபர் அண்ணன் அவர்களுக்கும் இயக்கத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருட்பணியாளரைத் தாங்க முன்வந்த திரு. ஜான்சன் அவர்களுடைய குடும்பத்தாரை வாழ்த்துகிறேன்.


அருட்பணியாளர் அர்ப்பணிப்பு ஆராதனை

நமது பணித்தள ஊழியர்களின் உபவாசக் கூடுகை ஜனவரி 5ஆம் தேதி மதுரையில் உள்ள பதிவு அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனவரி 7ஆம் தேதி (IGSM India Graduate School of Missiology) வேதாகமக் கல்லூரியில் நடைபெற்ற அருட்பணியாளர்கள் பயிற்சிக் கூட்டங்களில் நானும் என் மனைவியும் பங்குபெற்று தேவசெய்தியளித்தோம்.

மூன்றாம் ஞாயிறு மகாராஷ்டிராவிலுள்ள உம்ரி கிறிஸ்தவ மருத்துவமனையில் உள்ள ஆலயத்தில் தேவவார்த்தையை பகிர்ந்து கொண்டேன்.



சீடராக்குதல் பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்கள்

அதைத் தொடர்ந்து சந்திரப்பூர் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் இரண்டு நாட்கள் அங்குள்ள நமது ஊழியர்களுக்கு, சீடராக்குதல் பயிற்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. நானும் என் மனைவியும் செய்தியளித்து, பயிற்சி கொடுத்தோம்.

முதன்முறையாக இந்தக் கூட்டங்களின் முழுச்செலவுகளையும் அந்த ஊழியர்களே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

திரு. கியானோஸ் தாக்கூர் மற்றும் அவரது மனைவி திருமதி. மீனா தாக்கூருக்கும் எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

24ஆம் தேதி நாகர்கோவிலில் புலம்பெயர்ந்தோர் நடுவில் ஊழியம் செய்யும் ஊழியர்களைப் பார்த்து, அவர்களை உற்சாகப்படுத்தி வந்தோம்.

25ஆம் தேதி தென்காசியிலுள்ள திருச்சபைகளில் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள குருணைக்கல்பட்டி கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட விசுவாசிகள் இருக்கிறார்கள். 1999இல் கட்டப்பட்ட இவ்வாலயம் பழுதுபட்ட காரணத்தினால், அதை இடித்துவிட்டு, புதிய ஆலயம் கட்டத் திட்டமிட்டு, செயலாற்றி வருகிறோம். இதற்காக ஜெபித்து உதவும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

**கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,**
**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
**பொதுச்சேவகர்.**

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

**அருள்திரு.G. பொன்னுராஜ்**
**அருள்திரு. இம்மானுவேல் பாண்டி**
**திரு. இரா. பாலசுப்பிரமணியன்**
**திரு.V.S. தம்பிராஜ்**
**திருமதி. ரேணுகா பிரின்ஸ்**

இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| ஜனவரி மாத வேத விடைகள் | 07 |
| துதித்து மன்றாடுவோம்! | 08 |
| மறக்கமுடியாத அருட்தொண்டர்கள் | 20 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே | 27 |
| வாலிபர் பகுதி | 30 |
| சரியான விடை எழுதியவர்கள் | 32 |
| வேத வினாக்கள் | 33 |
| நடப்புச் செய்திகள் | 34 |


| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |

**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**


**ICGM**
**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 94459 24440
ICGM Land Line: (044)2229 1045
contacticgm@gmail.com


# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங் களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலு மிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94459 24440 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

அருட்செய்தி

# சந்தோஷத்தின் ஊற்று

Rev.A. லெஸ்லி நாகராஜன்

சந்தோஷத்தைத் தேடும் உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வெற்றியின் மூலம், செல்வத்தை சேர்ப்பதன் மூலம், உறவுகளின் மூலம் சந்தோஷத்தைத் தேடுகிறோம். ஆனால், இவை நிரந்தரமானவை அல்ல. ஏனென்றால், இவையனைத்தும் சூழ்நிலைகளால் பாதிக்கப்படக்கூடியவைகள்.

ஆனால், இயேசு கிறிஸ்து நமக்கு வாக்குப் பண்ணியிருக்கும் சந்தோஷமென்பது வாழ்வில் வரும் துன்பம், வேதனை, துயரம், வருத்தம், சஞ்சலம் எல்லாவற்றிலுமிருந்து நம்மை பாதுகாக்கும் கேடயம்போல, சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டது.

அதே வேளையில், உண்மைக்கு புறம்பானதுமல்ல. உணர்வு பூர்வமானதல்ல; கிளர்ச்சியூட்டக்கூடியதுமல்ல; இப்படிப்பட்ட சந்தோஷத்தை வேதத்தின் வெளிச்சத்தில் காணலாம்.

**பாடுகளின் நடுவில் பரவசம்-சந்தோஷம்**

பிலிப்பி சிறைச்சாலையில் பவுலும்-சீலாவும் கடுமையான சரீர உபத்திரவத்தை அனுபவிப்பதை வாசிக்கிறோம்.

அவர்களை அநேக அடிகள் அடித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களை பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களை தொழுமரத்தில் மாட்டி வைத்தான். (அப்.16:23-24).

அடுத்த வசனம் நமது கவனத்தை திசைதிருப்புகிறது. நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள் (அப்.16:25). இந்த நிகழ்வு நம்மை பிரமிக்க வைக்கிறது. வஸ்திரங்கள் கிழிக்கப்பட்ட நிலையில், பவுலும், சீலாவும் துதித்துபாடுவது, மனித சக்திக்கு அப்பாற்பட்டது. பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்தும்போது, இப்படிப்பட்ட மகிழ்ச்சியுள்ளவர்களாக மாறுகிறோம். பாடுகளின்போது வரும் பரவசம் பரிசுத்த ஆவியானவர் அருளுவதாகும்!

35 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு அருட்பணித் தம்பதியினர், தங்களுடைய ஒரு வயது மகனோடு, ஒரு பழங்குடியின கிராமத்தில் வசித்து வந்தார்கள். காடுகளின் நடுவிலிருந்த மூங்கில் வேயப்பட்ட வீடு, சாணம் பூசப்பட்ட தரை மற்றும் சுவர்கள். மின்சாரம் இல்லை. கழிவறை இல்லை.

ஒரு நாள், இரண்டு பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள், இவர்கள் வீட்டுக்கு முன்பிருந்த பனை மரத்தடியில் கள் பருகிக்கொண்டிருந்தனர். அப்போது, இந்த அருட்பணித்தம்பதியினரைப் பார்த்து, வாருங்கள் இந்த பானத்தை பருகினால், மிகுந்த மகிழ்ச்சி உண்டாகுமென்றனர்.

அப்போது, அவர்கள் இந்த மகிழ்ச்சி எங்களுக்குத் தேவையில்லை என்றனர். அதற்கு அவர்கள், இதைக் காட்டிலும் சந்தோஷமானதை நீங்கள் வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டார்கள்.

இன்றைய உலகம், இப்படிப்பட்ட

தற்காலிக சந்தோஷம் மற்றும் பரவசம் தரும் பொருட்களை சந்தோஷமென்று வசீகரித்துக் கொண்டிருக்கிறது.

**வறுமையில் சந்தோஷம்:**

அத்திமரம் துளிர்விடாமல் போனாலும், திராட்சைச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன் (ஆபகூக் 3:17-18) என வாசிக்கிறோம்.

கர்த்தருக்குள் சந்தோஷம் என்பதன் பொருள் என்னவென்றால், நம்மை ஆண்டவரின் ஆளுகைக்கு முழுவதும் ஒப்புக்கொடுக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆளுகை செய்யும்போது, நாம் சந்தோஷ முள்ளவர்களாக மாறுகிறோம் என்பதே வேதம் கற்றுத்தரும் சத்தியம்.

தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17) என பவுல் கூறுகிறார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில் நடைபெற்ற உபத்திரவத்தில், ஒரு கிராமத்தில் விசுவாசக் குடும்பத்தினர் அடித்துத் துரத்தப்பட்டனர். ஓட்டு வீடுகள் உடைக்கப்பட்டன. அரசாங்கம் அமைத்துக் கொடுத்த அகதிகள் முகாமிலிருந்து கொண்டு சில சகோதரிகள் எங்களைத் தொடர்பு கொண்டு பேசினார்கள்.

அண்ணா, எங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நாங்கள் இங்கு சந்தோஷமாகவே இருக்கிறோம். நீங்கள் சோர்ந்து போக வேண்டாம். என்ன நடந்தாலும் நாங்கள் இயேசுவை விட்டு விலக மாட்டோம் என்றனர்.

இந்தக் கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை கடந்த டிசம்பர் மாதத்தில் மங்களப்படைப்பு செய்தோம். வறுமையில் சந்தோஷம், பாடுகளில் சந்தோஷம், நோய்கள் நடுவில் சந்தோஷம். இதுவே பரிசுத்த ஆவியானவர் தரும் உண்மையான சந்தோஷம்.

**நோயில் சந்தோஷம்:**

நோயில் பாதிக்கப்பட்டிருந்தாலும், வியாகுலமாயிருந்தாலும்,பாடுகளாயிருந்தாலும், அவற்றின் நடுவே பலர் சந்தோஷமாயிருந்தனர் என வேதத்திலே பல இடங்களில் வாசிக்கிறோம்.

...அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய்...(அப்.5:41) என வாசிக்கிறோம்.

என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது,உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். (யாக்.1:2-3).

2020இல் கொரோனாவின் முதல் அலை வந்தபோது, நானும் அதினால் பாதிக்கப்பட்டேன். இதைப்போல பலமுறை மரணப்பள்ளத்தாக்கைக் கடந்து வந்திருக்கிறேன்.

கர்த்தருடைய கிருபையால் இந்த நோய்கள் பரிசுத்த ஆவியானவர் தந்த சந்தோஷத்தை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளவில்லை.

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்

மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என்மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன் (யோபு 19:25-26) என்று யோபு கூறுவதை வாசிக்கிறோம்.

அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு.. (எபி.11:25) என மோசே தனது மகிழ்ச்சியின் தன்மையை விவரிக்கிறார்.

அநித்தியமான பாவ சந்தோஷங்கள் அனேகமுண்டு. இவைகளெல்லாம் குறுகிய கால மகிழ்ச்சிக்கானவைகள்.

பின்பு: ஆத்துமாவே, உனக்காக அனேக வருஷங்களுக்கு அனேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் (லூக்கா 12:19) என்று நன்றாய் விளைந்த தானியங்களை உடைய ஒருவன் சொல்வதைப் பார்க்கிறோம்.

தேவனோ அவனை நோக்கி, மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறுகிறார். தேவன் பொருட்களைப் பற்றிய மகிழ்ச்சியை மூடனுடைய சந்தோஷம் என்று கூறுகிறார்.

இயேசுவின் பிறப்பை அறிவிக்க வந்த தேவதூதர்கள், இதோ, எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று கூறுகிறார்கள்.

சகல ஜாதிகளுக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தருவது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாகும்.

பாவ வாழ்க்கை வாழும் மனந்திரும்பாத எவரிடமும் சந்தோஷமிருக்காது. ஏனெனில், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. இதன்விளைவாக, ஆவியின் கனியாகிய சந்தோஷம் அவர்களுக்கு இல்லை.

அந்நிய பாஷைகளும், அற்புதங்களும், அடையாளங்களும் பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்க்கையை ஆளுகை செய்வதாலேயே என எண்ணக்கூடாது.

ஆனால், பரிசுத்த ஆவியானவரால் வரும் சந்தோஷமே உண்மையான சந்தோஷமாகும்.

இயேசு கிறிஸ்து அதை விளக்குகிறார். அன்றியும், பரலோக இராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். (மத்.13:44).

பரலோக சந்தோஷம் தன்னைத்தாமே தேவனுக்கு அடிமையாக்கித் தம்மையே தேவனுக்குக் கொடுத்துவிடும். அவரது அடிமைகளுக்கு மாத்திரமே இந்த பரிசுத்த ஆவியின் கனியாகிய சந்தோஷம் கிடைக்கிறது.

இந்த சந்தோஷம் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டது. உபத்திரவங்களால் மேற்கொள்ள முடியாதது. சரீர உபாதைகளும், வேதனைகளும், ஏழ்மையும், வறுமையும் இதை அழிக்க முடியாது.

இந்த சந்தோஷத்திற்குக் காரணமான நற்செய்தியை

அனுபவிக்கிறவர்கள் மாத்திரமே, இதை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியும். இதுவே அருட்பணி. இதுவே கிறிஸ்தவ வாழ்க்கை.

பரிசுத்த ஆவியானவர் தரும் சந்தோஷத்தை அனுபவித்திராத, உலகம் தரும் சந்தோஷத்தை பெரிதாக எண்ணி வாழும் ஏமாந்தவர்கள் நடுவிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

மனநல மருத்துவரைத் தேடி வந்த ஒருவர், அவரிடம், டாக்டர் எனக்கு மகிழ்ச்சியே இல்லை. என்ன காரணமென்று தெரியவில்லை. தயவுசெய்து நான் மகிழ்ச்சியடைய ஏதாவது சிகிச்சை செய்யுங்கள் என்றாராம்.

மருத்துவரும் அவரைப் பரிசோதித்துவிட்டு, அவருடைய உடலில் எந்தக் குறைவுமில்லையென்று கண்டறிந்தார். அதன்பின், அவரிடம், ஐயா இந்த நகரத்தில் சர்க்கஸ் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள கோமாளி ஒருவர் செய்யும் சேட்டைகளைப் பார்த்தால், உங்களுக்கு மகிழ்ச்சி வரும். சென்று பாருங்கள் என்று கூறினார். அதற்கு அந்த மனிதர், ஐயா அந்த சர்க்கஸ் கோமாளியே நான்தான் என்றாராம்.

இன்றைய கிறிஸ்தவ உலகம் மனந்திரும்பி, பாவத்தை விட்டுவிடாமல், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குட்படாமல் அல்லது தேவனுக்கு தங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்காமல் நித்திய சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது.

கிறிஸ்துவுக்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்போது, தெய்வீக சந்தோஷம் நமது அனுபவமாகிறது.

**பரிசுத்த ஆவியானவர் தரும் சந்தோஷத்தை அனுபவித்திராத, உலகம் தரும் சந்தோஷத்தை பெரிதாக எண்ணி வாழும் ஏமாந்தவர்கள் நடுவிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.**

# 2026 ஜனவரி மாத வேத வினாக்களுக்கு விடைகள்
## ரோமர் 1-8 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. அவபக்தி – அநியாயம் 1:18
2. பறவைகள் – ஊரும் பிராணிகள் 1:23
3. நீதியுள்ள தீர்ப்பு – கோபாக்கினை 2:5
4. சத்தியபரர் – பொய்யன் 3:4
5. அதிகாரங்கள் – வல்லமைகள் 8:38

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், கடனாளி 1:14
2. குணப்படும்படி, தயவு, பொறுமை, நீடியசாந்தம், ஐசுவரியத்தை 2:4
3. யூதரிலும், கிரேக்கரிலும், உபத்திரவமும், வியாகுலமும் 2:9
4. ஜீவனுடைய, பிரமாணம், பாவம், மரணம், விடுதலையாக்கிற்றே 8:2
5. மரணம், கிருபை வரமோ, இயேசு கிறிஸ்துவினால், நித்திய ஜீவன் 6:23

**விடை எழுதுக**

1. அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் 1:20
2. சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு 2:7
3. நீ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தால் 2:25
4. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு 8:28
5. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் 5:8

# துதித்து மன்றாடுவோம்

## தமிழ்நாடு

பிப்ரவரி-1

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி பணி செய்யப்பட்ட மேல்வென்னியூர், செங்கப்பாடி, எருக்கம்பட்டு, பாச்சேரி, கென்டிக்கல், கொட்டபுத்தூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட பவித்ரா, இளையராஜா, மாயவதி தமிழரசன், மாணிக்கம், மோகனப்பிரியா, ராஜமாணிக்கம், மேனகா, மோகன்ராஜ், ரோகித் ஆகியோருக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட பவித்ரா, சந்தியா ஆகியோருக்காகத் துதிப்போம். திரைப்பட ஊழியங்கள் மூலம் நற்செய்தி கேட்ட 150 பேர் இரட்சிக்கப்பட, ஆலய கட்டுமான பணிக்காக–தேவைகள் சந்திக்கப்பட, சபையில் சீஷர்கள் உருவாக ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, தொளார், எரப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, சபையின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட ரமேஷ்பாபுவுக்கு திருமணம் நடைபெற, மஞ்சுவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க– குடும்பத்தினர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, சிறுவன் கலாநிதிமாறனுக்கு தேவன் தந்த சுகத்திற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட சந்திரா, சித்ரா, செந்தில்குமாரி ஆகியோர் ஜெபக்குழுவில் இணைந்ததற்காக, சந்துருவுக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**
**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, அதிலேஷ், சதீஷ், ரேகாஸ்ரீ, தர்ஷன் ஆகியோர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். சென்ராயனூர் ,ஏழூர், பகுதிகளில் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட, ரேகாஸ்ரீ குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

பிப்ரவரி-2

**அருட்பணியாளர் :**
**திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப் பாளையத்திற்காக, பெரியசாமி பழனியம்மாள் ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, லீதியாள் சுகம்

பெற்றதற்காக, போதகர் மனைவி சுகமடைந்து வருவதற்காக, தமிழரசி, சதீஷ் ஆகியோர் பரிசு பொருள் வாங்க உதவி செய்வதற்காகத் துதிப்போம். பெரியசாமி மனநோயிலிருந்து சுகம் பெற, பழனியம்மாள் பயத்திலிருந்து விடுதலை பெற, கீதா, மரகதம் ஆகியோர் பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப, செல்லையா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நாகம்மாள், முருகன், குப்பம்மாள், ரமேஷ், அன்னக்கொடி, சண்முகம், லட்சுமி ஆகியோர் விசுவாசத்தில் நிலைத்திருக்க, கொண்டப்பாளையம் பகுதியில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. லூர்டஸ்- திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பாளையம், பூவளபருத்தி, குள்ளேகவுண்டனூர், பொன்னாச்சியூர், உப்பிலியனூர், சூலேஸ்வரன்பட்டி, சமத்தூர், ரங்கசமுத்திரம், கணபதிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, சரத், விவேக், கிஷோர், கவிதா, வேலன், சபரீஷன் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, கிரீட்டாவின் கர்ப்பத்தில் உள்ள குழந்தை இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் சபைக்கு வர, ஜான், மேரி ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, கிரீட்டா, ராணி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, காணாமல் போன ரேணுகாவின் மகன் சீக்கிரம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு.எபிநேசர் உவைட்-திருமதி. மேரி**

ஏஞ்சல் குடும்பமாக ஆலயம் வருவதற்காகத் துதிப்போம். கிருபைக்கு நிறைவான சுகம் கிடைக்க, சத்யாவுக்கு வேலை கிடைக்க, ஆபிரகாம் இருதய நோயிலிருந்து சுகம் பெற, ஏஞ்சல் மகன் மூளை நரம்பு நோயிலிருந்து சுகம் பெற, ரெபேக்காள் கால் வலியிலிருந்து சுகம் பெற-கணவர், மகள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. இம்மானுவேல் கிளமெண்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையத்திற்காக, பலவீனமாக இருந்த பென்னி கிளாட்சன் சுகமடைந்து வீடு திரும்பியதற்காகத் துதிப்போம். கிறிஸ்டியானா ஜாய், கோமதி, முத்து, ரூபி, கிளெமென்ட், பிளஸ்ஸி ஹன்னா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**பிப்ரவரி-3**

**அருட்பணியாளர் :**

**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வாழைக்கொம்பு கிராமத்திற்காக, நற்செய்தி கேட்ட பத்மாவதி, காளீஸ்வரி, அந்தோணி, கலா, ஈஸ்வரி, ஜோதி, சிவரஞ்சனி, டயானா, ஜவகத் அலி ஆகியோருக்காக, கலா, அந்தோணி ஆகியோர் குடும்பமாக ஆலய ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, உம் சல்மா, ரெஜினா, ராஜ்குமார் ஆகியோர் விசுவாசத்தில் வளருவதற்காக, ரெஜினா பேகம், வர்கீஸ் ஆகியோர் சுகம்

பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, காளீஸ்வரி, முனீஸ்வரன் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ராணி, வேல்முருகன், சிவா, அந்தோணி, ஜோதி ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**
**அருட்பணியாளர்:**
**திரு. S. பால்ராஜ் –திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி, பிச்சைக்கல்பட்டி, சின்னமருதூர், உப்புக்கரை ஆகிய கிராமங்களுக்காக, பின்மாற்றத்திலிருந்த முனியப்பன், வளர்மதி, கீதா ஆகியோர் குடும்பமாக ஆலயத்திற்கு வருவதற்காகத் துதிப்போம். முனியப்பன் வயிற்றுப்புண்ணிலிருந்து சுகம் பெற, கிறிஸ்துமஸ் கூடுகையில் புதிதாக கலந்து கொண்டவர்கள் இரட்சிக்கப்பட–தொடர்ந்து ஆலயம் வர, அற்புதா, தமிழ்ச்செல்வி, விஜயா, சரஸ்வதி ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம் .

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, செல்வி, முருகாத்தாள் ஆகியோர் மீண்டும் சபைக்கு வருவதற்காக, 3 கிராமங்களில் புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, விண்ணரசி (கையில் புண்), தங்கமணி (மனநோய்), சண்முகம் (பக்கவாதம்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

6 பேர் திருமுழுக்குப் பெற்றதற்காக, கொடந்தூர் (மலைவாழ் மக்கள்), செஞ்சுவாடி சர்க்கஸ் மக்கள்) ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, புஷ்பராஜ் தொண்டை புற்று நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, லட்சுமி, குமார், வள்ளியம்மாள், காயத்ரி, சரஸ்வதி, செல்லம்மாள் ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, ராமன் சிறுநீரகக்கல் அடைப்பு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கோபால், வெண்ணிலா, பாக்கியலட்சுமி ஆகியோர் நரம்புத் தளர்ச்சி நோயிலிருந்து சுகம் பெற, பிரபாகரன், மாணிக்கம் ஆகியோர் புற்று நோயிலிருந்து சுகம் பெற, சங்கீதா, ஹரிகிருஷ்ணன், ஊழியர் மனைவி ஆகியோருக்கு நிறைவான சுகம் பெற, ரங்கம்மாள், வீரா, சாவித்திரி, முருகவேல், லட்சுமி ஆகியோர் தடை நீங்கி ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**பிப்ரவரி-4**

**திருச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர் :**
**திரு.S.ஜெயக்குமார்–**
**திருமதி. மரியசெல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர் சோபனபுரம், கொட்டம்பட்டி, மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி, ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக,

கணேஷ் டிராக்டர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் ஜானகி, சாந்தி, வசந்தா, கவிதா, வரதராஜ் ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, சோபனபுரத்தில் நடைபெறும் மாலை நேர வகுப்புகள் தடையின்றி நடைபெற, மாராடி சிறுவர் வேதாகமப் பள்ளியில் கலந்து கொள்ளும் பிள்ளைகள் நன்றாக படிக்க-பெற்றோர்கள் இரட்சிக்கப்பட, டேவிட் மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.B. தினேஷ் - திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழ்குறிச்சி, தெற்குத் தெரு, கீழக்கண்டார் கோட்டை ஆகிய பகுதிகளுக்காக, தனலட்சுமி கணவருக்கு நல்ல வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரபாவின் மூத்த மகன் (நான்கு வயது) விரைவில் நடக்க, அம்பிகா, முரளிதரன் ஆகியோருக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**மதுரை மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, 300 பேருக்கு புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, சபையின் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காகத் துதிப்போம். புதிதாக நற்செய்தி கேட்ட லட்சுமி, அம்மாவாசி, வளர்மதி, சுப்பு ஆகியோர் இரட்சிக்கப்பட, கிரேசிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பவுலுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. S. சாமுவேல்-திருமதி. ரோகிணி**

வைஷாலி, சோலையம்மாள், சுதா, ராஜேஸ்வரி, ராதா, தாமரை, குமார் ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, பாண்டி வீட்டிற்கு மின்இணைப்பு கிடைத்ததற்காக, ஆராதனை நடத்துவதற்கு புதிதாக கட்டிடம் கிடைத்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ள, குமார் தொழில் ஆசீர்வதிக்கப்பட, குடிப்பழக்கத்தினால் ஏற்பட்ட சண்டையினால் சிறையில் உள்ள வினோத் இரட்சிக்கப்பட-விடுதலை பெற, சீடத்துவ பயிற்சியில் அநேகர் பங்கு பெற ஜெபிப்போம்.

**பிப்ரவரி-5**

**அருட்பணியாளர் :**
**திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அரசப்பட்டி, வெயிலுகந்தபுரம், காமாட்சிபுரம், குளத்துவாய்ப்பட்டி, சமத்துவபுரம், வலையங்குளம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மதன்கருப்பு, கண்ணன், அருண், வைதேகி, பழனி, அய்யாவு, மகாலிங்கம் ஆகியோருக்காக, மாரியம்மாளுக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். மாரியம்மாள் ஆராதனையில் கலந்து கொள்ள, மீனாவிற்கு ஏற்ற சமயத்தில் சுகப்பிரசவம் கிடைக்க, ஆல்வின் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பின்வாங்கிப்போன குடும்பங்கள் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. M. கார்த்தி–திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, பூசலபுரம், புதுப்பட்டி, ஜம்பலாபுரம், ஆண்டிப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட லட்சுமி, கருத்தபாண்டி, மூக்கம்மாள், வள்ளியம்மாள், முத்துபேச்சி ஆகியோருக்காகத் துதிப்போம். ஊழியர் வீடு கட்டுமானப்பணி விரைவில் முடிவடைய, 2026இல் எடுத்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட, நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. கந்தசாமி–திருமதி. முருகம்மாள்**

நற்செய்தி கேட்ட சுமன், பவித்ரா, பரிமளா, புண்ணியன், குருமூர்த்தி, விக்ரம், கௌசிகா, கண்ணகி, உதயன், சுமித்ரா ஆகியோருக்காக, நித்தியபிரியா கால் கட்டியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, அனுஷ்கா, கோஷிகா, மீனா, துளசிமணி ஆகியோர் விசுவாசத்தில் வளர, மீனா வயிற்றுக் கட்டியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. P. சத்தியநாதன்–திருமதி. கிறிஸ்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோபாலபுரம், கண்ணாபட்டி, வெங்கடாசலபுரம், ரெட்ரப்பட்டி, புதுப்பட்டி, முத்துலிங்காபுரம், வையூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட அம்பிகா, கூடம்மாள், முத்துப்பாண்டி, ஜெயா ஆகியோருக்காக, சீதாலட்சுமி, பிரவீனா ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, தர்ஷன் விபத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். அழகர்சாமி மகனுக்கு திருமணம் நடைபெற, வர்ஷினிக்கு கண்பார்வை கிடைக்க–குடும்பம் இரட்சிக்கப்பட, முனியம்மாள் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, கௌரியின் கணவன் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற–சமாதானம் கிடைக்க, சுப்புலட்சுமி குடும்பம் இரட்சிக்கப்பட, கிருஷ்ணா கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.

**பிப்ரவரி-6**

**அருட்பணியாளர் :**

**திரு. P. ராஜா–திருமதி. அன்னாள்**

நற்செய்தி கேட்ட பிரியா, கணேசன், மீனா, விஜி, காமாட்சி, ஜெயா, சின்னகண்ணன், விமலா, பிரகாஷ், ஜெயமாரி, பொன்னி, ஜீவித், கோகுல் ஆகியோருக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல், மொட்டைப்பாறை, குன்னனம்பட்டி, காந்திநகர், எம்.ஜி.ஆர் காலனி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பிரகாஷ் குடிப்பழக்கத்தில் இருந்து விடுதலை பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, சபையில் உள்ள வாலிபர்கள் சாட்சியாக வாழ ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. காளிமுத்து–திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமல்லூர், காளப்பம்பட்டி, அழகுரெட்டிபட்டி, ஓணாம்பட்டி, சிவநாதபுரம், ஆகிய கிராமங்களுக்காக. தகரம் வேயப்பட்ட ஆலயத்தின் மேற்பகுதியில் பால் சீலிங் அமைக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெற, பாண்டியம்மாளுக்கு சுகப்பிரசவம் கிடைக்க,

செல்வராஜ் குடும்பம் இரட்சிக்கப்பட்ட, கலைச்செல்வி குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, லாசரு தேர்வில் வெற்றி பெற்றதற்காக, சுவாதிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காக, ஊழியர், வேதமாணிக்கம், இம்மானுவேல் ஆகியோர் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, மேரிக்குக் கிடைத்த சுகத்திற்காக, விபத்தினால் ஏற்பட்ட முதுகெலும்பு பாதிப்பிலிருந்து குமார் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நீதி குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ள, தோகைமயில் சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற, சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெற, சுபா சாலமோனுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. M. அகஸ்டின்–திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர், சங்கம்பட்டி, சக்கரப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஜெகதீஷ் மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, சின்னழகுவின் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காக, முகிலனுக்கு வேலை கிடைத்ததற்காக, ஜெயராணியின் தாயார் சுகம் பெற்றதற்காக, மகாலட்சுமியின் வீடு கட்டி முடிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஜான் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள–குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, அங்கம்மாளின் தொழில் ஆசீர்வதிக்கப்பட சீனித்தாய், வனிதா, அருணா ஆகியோர் தொடர்ந்து ஆலயம் வர, வீரம்மாள் வீடு கட்டப் பணத் தேவைகள் சந்திக்கப்பட, கணவனை இழந்த எஸ்தர் குடும்பத்திற்கு தேவஆறுதல் கிடைக்க, சிறுவர் ஊழியங்கள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :** பிப்ரவரி-7
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லிங்கப்ப நாயக்கனூர், சுளிஒச்சாம்பட்டி, அப்பனப் பட்டி, திம்மநத்தம், கொப்பளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, முருகன் இடப் பிரச் சனை முடிவடைந்ததற்காக, பின் மாற் றத்தில் இருந்த தாவீது ஐயா மீண்டும் ஆலயம் வந்ததற்காக, ஆலய மராமத்து பணிகள் செய்யப்பட்டதற்காகத் துதிப்போம். சேகர் இரட்சிக்கப்பட, மனோகர், மோகன், தேவி ஆகியோர் விசுவாசத்தில் வளர, லிங்கப்பநாயக்கனூர் திருச்சபைக்கு கல் லறை தோட்டம் கிடைக்க, ஊழியருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, அம்சுவின் காணாமல் போன பணம் கிடைத்ததற்காக, சுப்புத்தாய் நெஞ்சுவலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, செல்வம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக, சந்திரதேவிக்கு கர்ப்பப்பை அறுவைச்சிகிச்சை நன்றாக நடைபெற்றதற்காக, லட்சுமி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, முத்துலட்சுமி உறவுகள்–ஊர் மக்கள் தடை செய்தபின்பும் ஆலயம் வருவதற்காகத்

துதிப்போம். வடிவேலு இரட்சிக்கப்பட, பிரின்ஸ் ஜான் உடல்பெலவீனத்திலிருந்து நிறைவான சுகம் பெற, ராமசாமி, சந்திரதேவி, பழனியம்மாள் ஆகியோர் கால் வலியிலிருந்து சுகம் பெற, பேரனை இழந்த வளர்மதிக்கு தேவ ஆறுதல் கிடைக்க, லட்சுமி குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ராஜனுக்கு இரட்சிக்கப்பட்ட பெண் கிடைக்க– நிரந்தரமான வேலை கிடைக்க, முருகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. A. பால்ராஜ்–திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக,நற்செய்தி கேட்ட தங்கம், அகிலா, உமா, நாராயணன், சின்னையா ஆகியோருக்காக, சுதா பாலன் குடும்பமாக ஆலயம் வந்ததற்காக, சரண்யா கணவர் ஆஸ்துமா நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக– வீட்டில் ஜெபக்கூட்டம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். சின்னையா–உமா குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பிப்ரவரி-8**

**அருட்பணியாளர் :**

**திரு. G. ஜெகன்–திருமதி. திவ்யா**

நற்செய்திப் பணி செய்யப்பட்ட இந்திராநகர், உச்சப்பட்டி, சிவன் நகர், பொம்மையாபுரம், முனியாண்டிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, இந்திரா நகர், சிவன் நகர் ஆகிய பகுதிகளில் பின்தொடர்பணி மூலம் சந்திக்கப்பட்ட அனிதா, கண்ணன், கனகவேல், வெற்றிக்கொடி, மலர்விழி, அன்பு, அமலோற்பவம், ஆனந்த வடிவு, அன்புக்கரசி, அங்கயற்கன்னி, மகேஸ்வரி, வரதராஜ், பசுபதி, பாலகணேஷ், மாயக்கண்ணன் ஆகியோருக்காகத் துதிப்போம். பின்தொடர் பணி மூலம் சந்திக்கப்பட்ட குடும்பங்கள் இரட்சிக்கப்பட, மனைவியை இழந்த முத்துச்செல்வத்திற்கு தேவன் ஆறுதல் தர, அன்னலட்சுமி, பாலமுருகன், ஜான் பாண்டி, ராமர், மரிய ஸ்டெல்லா, பூங்கொடி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாய் கார்டன், சம்பங்கிநகர், காந்திநகர், அம்பேத்கர் நகர், பத்மா நகர் ஆகிய கிராமங்களுக்காக, திவ்யா மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, புதிதாக ஆராதனையில் கலந்து கொண்ட சக்திவேல் குடும்பத்திற்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட துரைசாமி நகர், பாக்யலட்சுமி நகர், லாலாசத்திரம், கிருஷ்ணா நகர், டைடல் நகர், வடிவேல்கரை ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். விசாலினி, மகிமா, சந்தோஷ், பிரியா ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, துரைச்சாமி நகரில் புதிதாக ஞாயிறு பள்ளி மற்றும் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட, சக்திவேல் விசுவாசத்தில் பெலப்பட– தொடர்ந்து சபைக்கு வர, நறுமணாவிற்கு சுகப்பிரசவம் கிடைக்க– அவரது கணவர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. பிலிப் முருகன்–திருமதி. அனிதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட மக்களுக்காக, சிறுவர் ஊழியம் மற்றும்

வாலிபர் ஊழியம் செய்வதற்கு தடைகள் நீங்கியதற்காக, சபையில் வளர்ச்சி ஏற்பட்டதற்காகத் துதிப்போம். சந்திக்கப்படாத கிராமங்களில் இருக்கும் எதிர்ப்புகள் மறைய, ஊழியம் தடையின்றி நடைபெற, பின்வாங்கி போனவர்கள் மனம் திரும்ப, நற்செய்தி அறிவிப்பதற்கானத் தடைகள் விலக ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**

**திரு. வயநாட்டுமுத்து-திருமதி. கனியமுது**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காகத் துதிப்போம். ஆலயம் விரிவாக்கம் செய்யப்பட, சாந்தகுமார், சீதா ஆகியோருக்கு நிரந்தர வேலை கிடைக்க-ஏற்ற காலத்தில் திருமணம் நடைபெற, ஏஞ்சல், சுதா, சத்தியா, பிரியா, நாகராஜ், கணபதி, ஐசக் ஆகியோர் நல்ல முறையில் படிக்க, வேல்முருகன், பால்பாண்டி, ஜெயா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, கனகா, முத்துலட்சுமி, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**பிப்ரவரி-9**

**அருட்பணியாளர் :**

**திரு. J. ஜெயகுமார்-திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கன்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளப்பாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காக, சபையில் உள்ள வாலிபர்கள் சங்கீதம் 119: 1 முதல் 90 வரை உள்ள வசனங்களை மனப்பாடமாக சொன்னதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட தினேஷ், ஜெகதீஷ், ரம்யா, மீனாட்சி, நவீன், முகிலன், ஆகாஷ், அஸ்வின், கௌசிகா, அருண், மீனா, பேரரசு, முத்துராமன், சாந்தி, பானு ஆகியோர் இரட்சிக்கப்பட, ஊழியரின் மனைவி கனிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**தேனி மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. P. தேவதாஸ்-திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, அழகாபுரி, ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட கணேசன், முருகன், செல்வம், சரவணன், குணசேகரன், குமரன், பார்த்திபன், பிரகாஷ், பிச்சைமணி ஆகியோருக்காகத் துதிப்போம். சக்திவேல், கௌதம், சரவணன் குடும்பம் இரட்சிக்கப்பட, வண்டியூர், பாலக்கோம்பை, தெப்பம்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்ட, சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெற, ஆலயத்திற்கு கழிவறை கட்டப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.G. நாதன்-திருமதி. மேகலா**

கிறிஸ்துமஸ், புத்தாண்டு ஆராதனைகள் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகிற ஆறுமுகம், மணி, தெய்வானை ஆகியோருக்காக, பெரியசாமியின் மூன்று பிள்ளைகளுடைய கல்வித் தேவைகள் சந்திக்கப்பட்டதற்காக, கைகால் செயல்படாமலிருந்த சுரேஷ்குமார் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். டேனியல், இம்மானுவேல், எரேமியா, அபி ஆகியோர் விரைவில் திருமுழுக்கு எடுக்க, ஆறுமுகம் கால் வீக்கம்-நீரிழிவு நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**

**திரு.J.உலகநாதன்-திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகபட்டி, தாமரைக்குளம், வள்ளுவர் காலனி, ஆசிரியர் காலனி, மதுராபுரி,

பெரியகுளம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட கமலா, வேணி, சாந்தி, ரகுபதி, மாலா ஆகியோருக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட இளவேனில், ராஜேந்திரன், சவரிநாதன் ஆகியோர் குடும்பங்கள் இரட்சிக்கப்பட, கவிதா, விஜயலட்சுமி ஆகியோருக்கு சுகம் கிடைக்க, கமலா வீடு கட்டுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட, ஜோசப்புக்கு விரைவில் திருமணம் நடைபெற, தவமணி கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**பிப்ரவரி-10**

**விருதுநகர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**அருள்திரு.B. சாமுவேல் கணேசன் திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக ஆராதனைக்கு வந்த ஐந்து குடும்பங்களுக்காகத் துதிப்போம். ஞாயிறு பள்ளி நடத்துவதற்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர் கிடைக்க, வாலிப ஆண்கள்/பெண்கள் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்ள, திருமணம் ஆகாத வாலிபர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**தென்காசி மாவட்டம்**

**அருட்பணியாளர் : திரு. லிவிங்ஸ்டன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மருதங்கிணறு காலனி, வலசை, சிவகாமிபுரம், சிதம்பராபுரம், திருமலாபுரம், கே.கோவில்பட்டி ஆகிய பகுதிகளுக்காக, சுபா, பூங்கொடி, அல்லி மலர், வீரபாண்டி, குமாரசாமி ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, ஜெபத்திற்குப் பின் வசந்தாவுக்கு நிறைவான சுகத்தை கொடுத்ததற்காகத் துதிப்போம்.

**கரூர் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு. J. பவுல்ராஜ்– திருமதி. எமீமாள்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆத்தூர், நத்தமேடு, சமத்துவபுரம், பழமாபுரம், குட்டக்கடை, புண்ணம், செல்லரப்பாளையம் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக சந்திக்கப்பட்ட தன்னாசி கவுண்டனூர், கள்ளிப்பாளையம் ஆகிய கிராமங்களுக்காக, ஆத்தூர், புன்னம், குட்டகடை, பழமாபுரம், செல்லப்பாளையம், பஞ்சமாதேவி ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, துரைராஜின் வழக்கு விரைவில் முடிவடைந்ததற்காக, ஜெயாவுக்கு அரசு வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். மணி மனைவியுடன் சேர்ந்து வாழ, ராஜா, ராணி ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, பாலாஜி மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சுவாதி கணவருடன் சேர்ந்து வாழ, மனிஷா, சிவரஞ்சனி கணவர் ஆகியோர் இரட்சிக்கப்பட, நகோமியின் உறவினர்கள் இரட்சிக்கப்பட, விஜய் பிரபு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற– கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ஆனந்தராஜ், உதய பானு ஆகியோருக்கு அரசு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**விழுப்புரம் மாவட்டம்**

**அருட்பணியாளர் :**

**திரு.D. தங்கராஜ்–திருமதி. எஸ்தர் பிரியா**

இருதயமேரி காது வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, அந்தோணிசாமி சுகம் பெற்றதற்காக, இயேசுதாஸ் இரட்சிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். மது இரட்சிக்கப்பட–ப்ளஸ் டூவில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற,

ஐஸ்வர்யா கணவரோடு சேர்ந்து வாழ– பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, அந்தோணிசாமியிடம் பணம் வாங்கியவர்கள் அவரிடம் திரும்ப கொடுக்க, அனிதா, சுகந்தி, கிறிஸ்டி, வான்மதி ஆகியோருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க, ரமேஷ், சுரேஷ், பிரகாஷ், ராமலிங்கம் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற– இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பிப்ரவரி-11**

**தரிசனம் பரப்புவோர்**

பெரியகுளத்தில் ஆதரவாளர் கூடுகை, சிறப்பாக நடைபெற்றதற்காக, புதிய தொடர்புகள் கிடைத்ததற்காகத் துதிப்போம். இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங் கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R. பால சுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ், திரு.B. ஹெமின், திரு. ஜாம்சுவான்பாவ் சுந்தாக் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

வடஇந்திய அருட்பணியாளர் களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்ற தற்காகத் துதிப்போம். அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.சுக்மன் பொட்டாய், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி "ஆடியோ வேதாகமம்", தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**பிப்ரவரி-12**

**தலைமை அலுவலகம்**

நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச்சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழி

நடத்துதல் கிடைக்க, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர், திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**வளரும் விண்ணரசு**

அனைத்து தரப்பினரும் வாசிக்கும்படி, இதழ் மெருகேற்றம் செய்யப்பட, ஜெபக்குறிப்புகளுக்கு ஏற்ற சமயத்தில் பதில் கிடைக்க, கட்டுரைகள் எழுதுவோர் சரியான நேரத்தில் எழுதிக் கொடுக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, இருவருக்கும் நிறைவான சுகம் கிடைக்க, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

**பிப்ரவரி-13**

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜினி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்:**
**திரு. ஓமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கம்பிபாலம், ஆசாரிபள்ளம், பர்கயீ, தெங்கம்புதூர், பட்சேரி, ராமன்புத்தூர், கோணம், சைமன் நகர், பார்வதிபுரம் ஆகிய பகுதிகளுக்காக, சிப்ரா (நரம்பு நோய்), சுல்தான் ஆகியோர் சுகம் பெற்றதற்காக, சுல்தான், ஷ்ராவன் ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, முன்னா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, மயூரிக்கு கிடைத்த குழந்தை பாக்கியத்திற்காகத் துதிப்போம். காம்தா பிரசாத் (மன நோய்), அபிராஜ் (தொண்டைக்கட்டி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, 10 பேர் தடைநீங்கி திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தினகரன்**
**திருமதி. லீனா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தாம்பரம், பெருங்குடி, கல்லுக்குட்டை, கேபிகே நகர், தரமணி, மாம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்காக, வனஜா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். முனியன், சரஸ்வதி, திகம்பன் ஆகியோர் இரட்சிக்கப்பட, வனஜா சர்க்கரை நோயிலிருந்து விடுதலை பெற, ராகுல், விஜய் ஆகியோர் விசுவாசத்தில் வளர, ரேகா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

# ICGM வங்கி கணக்கு விவரங்கள்

**அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

**ஆலயக் கட்டிட நிதிக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 11194454531
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : SBIN0001479

**பத்திரிக்கை ஊழியத்திற்காக**

Account Name : IRAI ARASU TRUST
Account Number: 10143136762
Bank : State Bank of India
Branch Name : M.K. University, Palkalai Nagar.
IFSC Code : SBIN0002235

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, SMS மூலமாகவோ/ Whatsapp மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி. மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.

## வளரும் விண்ணரசுவுக்கு சந்தா செலுத்தி பத்திரிக்கை ஊழியம் சிறக்க உதவுங்கள்

# ஐடா ஸ்கடர்

(1870-1960)

அறிவு



இந்தியாவில் மருத்துவ அருட்பணியாளராயிருந்த ஜான் ஸ்கடரின் மகளே ஐடா ஸ்கடர். 1870ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் நாள், ராணிப்பேட்டையில் பிறந்தார்.

இளமையில் இந்தியாவில் வளர்ந்த அவர், தம்முடைய பெற்றோர்படும் கடின வாழ்வையும், துன்ப வாழ்வையும் பார்த்து, "நான் ஒருக்காலும் அருட்பணியாளராக மாறமாட்டேன்" என்று சொல்லுவாராம்.

கல்விக்காக அமெரிக்கா சென்ற அவர், தன் தாயாரின் உடல் நலக்குறைவு காரணமாக, விடுமுறையில் திரும்ப இந்தியா வந்தார். அப்போது, அவருடைய பெற்றோர் திண்டிவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அங்கு, ஒரு நாள் இரவு நடந்த நிகழ்ச்சி, அவருடைய வாழ்வை மாற்றியது.

மூன்று ஆண்கள் (இரண்டு இந்துக்கள், ஒரு முஸ்லீம்) அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டி, தங்கள் மனைவிகளுக்கு பேறுகாலம் பார்க்க அவசரமாக அவரை அழைத்தனர். தான் மருத்துவம் படிக்கவில்லை, தந்தைதான் டாக்டர் என்று ஐடா சொன்னாராம். அவர்களோ, " ஆண் டாக்டர் வேண்டாம்" என்று கூறிச் சென்றுவிட்டார்கள்.

சரியான மருத்துவ உதவியில்லாமல் அந்த மூன்று பெண்களும் அன்றிரவே இறந்துவிட்டனர் என்னும் அதிர்ச்சி செய்தி ஐடாவை உலுக்கியது. ஆண்டவரின் அழைப்பும் அன்று வந்தது.

அமெரிக்கா திரும்பிய அவர் விரைவில் மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து டாக்டராக மாறினார்.

தனது 30ஆம் வயதில் 1900 ஆம் ஆண்டு இந்தியா திரும்பினார். அந்த ஆண்டு அவர் தந்தை டாக்டர் ஜான் ஸ்கடர் இறந்தார். அவருடைய இடத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் மருத்துவப் பணிசெய்தார்.

அந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5000 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தார்.

முதலாவதாக, 1907இல் மருத்துவத் தாதியர் பள்ளி (Nursing School) தொடங்கினார். அதைத்தொடர்ந்து 1918இல் முதலில் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட கிருஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC – Medical Hospital) பின்னர் ஆண்களையும் சேர்த்துக்கொண்டது. 1928இல் மகாத்மா காந்தியடிகள் அந்தக்கல்லூரிக்கு வந்தார்.

கிருஸ்தவ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை (CMC Medical Hospital) இன்று இந்தியாவில் மட்டுமல்ல ஆசியாவிலேயே சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உடல் நலம் வழங்கி வருகிறது. கிருஸ்துவின் அன்பை செயலில் காட்டுகிறது.

60 ஆண்டுகள் அயர்வின்றி உழைத்த ஐடா ஸ்கடர், "நாம் மருத்துவப்பணி செய்யவில்லை - விண்ணரசுப்பணியே செய்கிறோம்" என்று சொல்லுவாராம்.

"உடலுக்கு நலம்; இருதயத்திற்கு ஆண்டவர்" என்று மருத்துவ அருட்பணி செய்து, தனது 90ஆம் வயதில் வேலூரில் இறந்த அவரை மறக்கவே முடியாது. ⇨⇨⇨

**வட இந்தியா** (பிப்ரவரி-14)

**அருட்பணியாளர்கள்:**

**திரு. லல்துராம் சலாம்.**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, ராதிகா துக்கா, அசோந்தி சலாம் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். கஷ்னு காவ்டே, துலுராம் துக்கா ஆகியோர் இரட்சிக்கப்பட, துலாராம் துக்காவின் பிள்ளைகளுக்கு நிறைவான சுகம் கிடைக்க, மத தீவிரவாத அமைப்புகள் மூலம் வருகிற மிரட்டல்கள் நிறுத்தப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, ராம்லால் வட்டே, பிரகாஷ் கோடா ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மலேச்சூர் கிராமத்தில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

(பிப்ரவரி-15)

**அருட்பணியாளர்:**
**திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, ராஸ்மதி, சுக்தாய் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, தஸ்ரத் சலாம் பிசாசின் பிடிலிருந்து விடுவிக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டதற்காக, உபவாச ஜெபம், ஓய்வுநாள் பள்ளி ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். கஸியா நேத்தாம், சரிதா கொர்ரம், பைதே கொர்ரம் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காக, சுனில் குமார் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

(பிப்ரவரி-16)

**அருட்பணியாளர்:**
**திரு. புத்சிங் வட்டே–**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய கிராமங்களுக்காக, மங்கள் பொட்டாய்க்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். சோனியா படே, அமித் படே ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரேகா விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜ¯குல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காக, சன்ஹெர் சலாம் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. தஸ்ரு பொட்டாய்–**

**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி, பூஜாவாகி ஆகிய கிராமங்களுக்காக, ரேலோ குமிட்டி இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பிப்ரவரி-17**

**அருட்பணியாளர்:**
**செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாந்தாகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, கஜே விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காகத் துதிப்போம். ஜெயந்தியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பாசந்தி, ராதா, சுனாரு ஆகியோர் நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு.தேசிராம் வட்டே–**
**திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காக, சந்துராம் வட்டே சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பல்சிங் மண்டாவியை இழந்த குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதல் தர, விபத்தில் பாதிக்கப்பட்ட மான்கி நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஜக்நாத்குமிட்டி–**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். புல்பாய் , ரஜாய், ரமேஷ், ஆர்த்தி, கண்டி, மாங்னே, மாங்கி, சிவ்லால் நாக், ராஜு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**

**பிப்ரவரி-18**

**திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, கீதாவுக்கு சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். லட்சுமி, சுனாய் ஆகியோர் விசுவாசத்தில் வளர, பிரதீப் மனைவிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி, மாலிங்நார் ஆகிய கிராமங்களுக்காக, மனோராம் காவ்டே, மாமோ, அம்ரித் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மாலிங்நாரில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**
**செல்வி. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மட்டாவாண்ட், நாராயண்பூர், கொர்ரா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ரேஷ்மா, சுக்தேவ், பூஜா, சமீர் ஆகியோர் நிறைவான சுகம் பெற, சங்கராவதியின் கணவர், தேஜஸ்வி ஆகியோர் இரட்சிக்கப்பட, பஹோ குமிட்டி, பிரிஜ்பதி குமிட்டி, பிஸ்ரி துக்கா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**பிப்ரவரி-19**

**அருட்பணியாளர்:**
**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, பிஸ்ரி காவ்டே இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். முங்காய், சுமித்ரா, சுக்லி ஆகியோர் நிறைவான சுகம் பெற, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர், கரஞ்சிபாடா ஆகிய

கிராமங்களுக்காக, கம்லால் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, ரஸோபாய், ஹாருணா ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். பாஜு விசுவாசத்தில் வளர, பிரமீளா, ஜுக்யா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, சோம்வாரி துக்கா இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பிப்ரவரி-20**

**அருட்பணியாளர்:**
**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, உபவாச ஜெபம், வீட்டுக் கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, சாஹித் வட்டே விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். சுசீலாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, புத்தியா, மனாய் திதி, ஜெய்கே திதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மான்சிங் கச்லாம்**
**திருமதி. சுல்மதி கச்லாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட படே ஜம்ரி, கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, மன்ராம் பொட்டாய்க்கு கண்பார்வை கிடைத்ததற்காக, ராம்லதி, சங்கீதா, ஆமே கச்லாம் ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். அமர் துருவ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, தர்ணி உக்கே, ராம்சகாய் சலாம் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, மங்கள் உக்கே, சீதாராம் உக்கே, படேல் கன்கர் கச்லாம், சுரேஷ் கச்லாம் ஆகியோர் இரட்சிக்கப்பட, ரோஹித் கச்லாம், அணில் கச்லாம் ஆகியோர் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**பிப்ரவரி-21**

**அருட்பணியாளர்:**
**திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காக, ராஜ்மன் கொர்ரம் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்தேவ் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோர்நர், தெலங்கா ஆகிய பகுதிகளுக்காக, ராஜேஸ்வரி குமிட்டி சுகம் பெற்றதற்காக–இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, சோமாரி விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுக்ராம் சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆமசாரா, மட்டாவாண்ட், ஜம்ஹரி, சிங்நார், மரக்கபேடா ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். வெவ்வேறு விடுதிகளில் பயிலும் அருட்பணியாளர்களின் 12 பிள்ளைகள் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**பிப்ரவரி-22**

**அருட்பணியாளர்:**
**செல்வி. சன்பதி காவ்டே**

தெலங்கா, பாலார், மெட்டாமில்லி ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வருவதற்காக, சுதானி, மங்காய், சுகோ ஆகியோர் சுகம் பெற்றதற்காக, சுகாய், ராஜ்பதி ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காகத் துதிப்போம். லகோதி, புவனேஷ்வரி, பஜ்நாத்சுத்ராம் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. சொனாரு கொர்ரம்**

மண்டி சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சுரேஷ் பவசாகர்**

பாய் ரிதேஷ் தண்டி வீடு கட்டியதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா - மகாராஷ்டிரா**

**அருட்பணியாளர்:**

**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காக, ராம்தேவ் யாதவ் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, லாகமில் ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**மத்தியப் பிரதேசம்**

பிப்ரவரி-23

**அருட்பணியாளர்:**

**திரு.தனுவா டோங்ரியா–திருமதி.மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிபார்டன், குக்ரி, சாந்தலீடோலா ஆகிய பகுதிகளுக்காக, பிரஹாஸ்படோ பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, நரேந்திரகுமாருக்கு வேலை கிடைத்ததற்காக, அமர்சிங், பாலோபாய், சரிஜினி ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, பனிகா, லோஹர், மஹரா, சாமர், பனியா ஆகிய இனக்குழுக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு.கமல் மனோடியா**

முர்தாவில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஜெசாயு, அர்ஜத் குமார் ஆகியோர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்:**

**திரு. குந்தர் பகெல்**

**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டாடாபானி, பயாக்குரா, ஆண்டவா மோடு, மாங்கை, நாக்ரா, ராமானுகஞ்ச் ஆகிய பகுதிகளுக்காக, ரோபின் கஞ்ச் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக, குட்கு கிராமத்தில் ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

பிப்ரவரி-24

**திரு. சந்தோஷ் பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட முர்பாவுக்காக, மகேந்திர முரளி இயேசுவை ஏற்றுக்கொண்டதற்காகத் துதிப்போம். கங்கா சிறுநீரகக்கல் நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, ஹேமந்த் மனோடியா நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. மங்கள் மராண்டி**

**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராம்பூர், குஸ்சிரா, கேட்பாந்தா ஆகிய கிராமங்களுக்காக, சுசாமோகர் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி–ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**

**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ரித்திக், சுனித்தா, சந்திரகலா, ரஜ்னி, கம்லா தேவி, ஆயூஸ் குமார், மம்தாதேவி, ராமு ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மிதிலேஷ்குமார்–**
**திருமதி. சுனித்தா தேவி**

பிப்ரவரி-25

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹர், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். சுரேந்திரகுமார், குரைலால், ராம் ரத்தன், பரனா தேவி, சுவாமில் யாதவ், கிஷோர் குமார், விஷால் தேவி ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, கானூரு, அன்னமேடு, சென்னாரெட்டிகன்ரிகா, பெரிமிடி ஆகிய பகுதிகளுக்காக, அன்னமேடு சென்டர் பகுதி சந்திக்கப்பட காரணமான கருணாகருக்காகத் துதிப்போம். ஜெஸி, மனம்மா, புஷ்பா ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, சிரவாணி, பெல்சியா ஆகியோரின் குழந்தைகள் நல்லமுறையில் வளர, டொட்லவாரமிட்டா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கவுள்ள எதிர்ப்புகள் மறைய, நாயுடுபேட்டா,கானூரு பகுதியில் உள்ள வாலிபர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றதற்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட டொட்லவாரமிட்டா, கானூரு, மரளப்பள்ளி, நாயுடுபேட்டா ஆகிய பகுதிகளுக்காக, ஏனாதி சென்டரில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, ஏனாதி மக்கள் கூட்டங்களை சந்திக்க வாய்ப்பு கிடைக்க ஜெபிப்போம்.

பிப்ரவரி-26

**அருட்பணியாளர்:**
**திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ராஜீவ்காந்தி காலனி, வெங்கடரெட்டி காலனி, பாடருபள்ளி, சிந்தாரெட்டிபாளம் ஆகிய பகுதிகளுக்காக, ஊழியரின் மகளுக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். வாலிபர் கூட்டம், ஞாயிறு ஓய்வுநாள் பள்ளி ஆகியவை தடையின்றி நடைபெற, ஊழியர் மூட்டு வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம், பொல்லாவாரி பாலம், கோத்தசெருவு ஆகிய பகுதிகளுக்காக, அமலா, ஸ்ரீகாந்த், சாவித்ரம்மா, சாய், சுதா, ரமணம்மா, நலுகுரி பிச்சையா, பாண்டம்மா, பண்டி வெங்கடம்மா, வெங்கடேஸ்வர்லு ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ஊழியர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஆலயக்கட்டுமானப்பணிகள் நிறைவடைய, சம்பூர்ணம்மா (75 வயது) நிறைவான சுகம் பெற, மஸ்தான், சாய் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட இபாசாபூர், வெங்கடபூர், சோளதேவனஹள்ளி ஆகிய பகுதிகளுக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடப்பூர், வாழப்பனஹள்ளி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட நாராயணசாமி குடும்பம், முனிராஜ் குடும்பம்

ஆகியோருக்காகத் துதிப்போம். ஊழியர் பிள்ளைகளின் கல்விக் கட்டண தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**ஒடிசா**

**அருட்பணியாளர்:**
**திரு. டேனியல் சாந்தா** **பிப்ரவரி-27**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, பாலிதிஷ் படோர், பாதாபடோர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ரீட்டா, ஜோசப், ஜோய்ரமோ, சந்துரு, நெல்சோ, மனிக், புருஷ்தி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, சுபலட்சுமி குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, கைலாஷ் விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காக, ஜெயந்தி கால் வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி அறிவிக்க தடை ஏற்பட்டுள்ள துமார்திதி கிராமத்திற்காக, ஜெய்சிங் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திருமதி. ஜானகி மாஜி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பானுவா குடா ஆகிய கிராமங்களுக்காக, ஊழியர் ஜானகி மாஜிக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காகத் துதிப்போம். மதன், தஸ்காமி, ஜெய்மனி, தசாரி, கோஜ்மதி, ஆஸ்தி, ஜெயந்தி, சன்மிதி ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. லெலன் தெளங்கல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோராபுட் பகுதிக்காகத் துதிப்போம். ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், வீட்டுக்கூட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற, வேதபாட வகுப்பு, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**(வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்:**
**திரு. தர்மேந்திரா தெப்பர்மா** **பிப்ரவரி-28**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிம்னா கிராமத்திற்காக, வீட்டுக்கூட்டம், உபவாச ஜெபம், வேத பாட வகுப்பு, வீடு சந்திப்பு ஆகியவை நடைபெற்று வருவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மங்லியான்லம் (வ.திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்க்ராய்க்காகத் துதிப்போம். பக்திராம் ரியாங் விசுவாசத்தில் வளர, உபேந்திரா ரியாங் புற்று நோயிலிருந்து சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஹௌகௌலால் சாம்தே**
**(வ. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட டங்கபாராவுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, லிலேந்திரா ரியாங்குக்கு அறுவைச்சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காகத் துதிப்போம். விசுவாசிகள் விசுவாசத்தில் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. மென்டு தெப்பர்மா**
**(மே. திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சித்தாய் கிராமத்திற்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம், வேதபாடக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, விசுவாசிகள் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.





# தானியேலின் வெளிப்படுத்தல்

Dr.N.J. ஞானையா



ஜானும் மாணிக்கமும் பேசிக்கொண்டே வருகின்றனர்.

**ஜான்:** மாணிக் கம், நாம் இருவரும் கொடுத்து வைத்தவர்கள். ஆசிரியர் சாலமோனின் அறிவும் அவருக்கு அருட்பணி மீது இருக்கும் தாக்கமும் நமக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து வருகிறார்.

**மாணிக்கம்:** ஆமாம் ஜான். வேதத்தை ஆழ்ந்து கற்றிருக்கும் அவர், ஒவ்வொரு பகுதியிலிருந்தும், அழகாக அருட் பணியுடன் இணைத்துச் சொல்லுவதைக் கேட்பது உண்மையிலேயே ஒரு பாக்கியம்தான்.

ஆசிரியர் சாலமோன் வருகிறார்.

**சாலமோன்**: என்ன தம்பிகளா? மிக உற்சாக மாகக் காணப்படுகிறீர்கள். இன்றைய உரையாடலுக்குத் தயாரா?

**ஜானும் மாணிக்கமும்:** மிக ஆவலுடன் தயாராக இருக்கிறோம். ஏற்கெனவே நீங்கள் படிக்கச்சொன்ன தானியேலின் புத்தகத்தையும் கொஞ்சம் படித்து வந்திருக்கிறோம்.

**சாலமோன்**: மிகவும் நல்லது. ஒருபக்கத்தில் உலகத்தில் இயேசுவின் செய்தி பரவி வந்தாலும், இன்னொரு பக்கத்தில் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களும் பெருகி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் நமக்கு அருமையான பாடங் களை – அருட்பணிக் கருத்துக்களை – தானியேல் புத்தகம் கொடுக்கிறது. ஒவ்வொன்றாக நாம் பார்க்கலாம்.

முதலாவதாக கடவுளின் அரசு (கர்த்தரின் ராஜ்யம்) என்னும் கருத்து மிக ஆணித்தரமாகக் குறிப்பிடப்படுகிறது. மாணிக்கம், தானியேல் 7:14 ஐ வாசி.

**மாணிக்கம்:** (விரைவாக வேதாகமத்தைப் புரட்டி) "சகல ஜனங்களும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாதது மாயிருக்கிறது.

**ஜான்:** சார் நான் திருவிவிலியத்திலிருந்து அதே வசனத்தை வாசிக்கவா?

**சாலமோன்**: அருமையான தமிழ் மொழிபெயர்ப்பு அது. கண்டிப்பாக வாசி

**ஜான்:** "ஆட்சியுரிமையும், மாட்சியும், அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. எல்லா இனத்தாரும், நாட்டினரும்,மொழியினரும் அவரை வழிபட வேண்டும். அவரது ஆட்சியுரிமை என்றுமுளதாகும். அதற்கு முடிவே இராது. அவரது அரசு அழிந்து போகாது."

**சாலமோன்**: மிக அற்புதமான வசனம். பல வாரங்களுக்கு முன் நாம் படித்த ஆபிரகாமின் வரலாறு நினைவில் வருகிறது. எல்லா நாட்டினரும், மொழியினரும் அந்த இறையரசில் பங்கு பெறுவர் என்று தானியேல் முன்னுரைக்கிறார்.


**மாணிக்கம்:** நான் நேற்று படித்த வெளிப்படுத்தல் 7:9 நினைவில் வருகிறது. அந்த வசனத்திலும், இதோ, சகல இனத்தாரும், மொழியினரும் வெள்ளை அங்கிகளை உடுத்தி ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்பார்கள். தானியேலே அதைக்கூறியுள்ளார் என்பது வியப்பாக உள்ளது.

**ஜான்:** அடுத்து என்ன அருட்பணிக்கருத்து.

**சாலமோன்**: அன்றைய கடவுளின் மக்கள் (யூதர்கள்) வேற்றினத்து மன்னனால் ஒடுக்கப்பட்டு, துன்பம் அனுபவித்தனர். சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட தானியேலும், அவருடைய 3 நண்பர்களும் தங்களைத் தீட்டுப்படுத்தும் உணவை மறுத்து, உறுதியாய் நின்றனர். மதுபானமோ அல்லது வேறு தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட உணவோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலையில் அதற்கு உடன்படவில்லை. இதை நாம் முதல் அதிகாரத்திலேயே வாசிக்கிறோம். தைரியம், துணிச்சல் இவை அருட்பணிக்கு மிக அவசியமான குணங்கள். தமிழ்நாட்டிற்கு அருட்பணியாளர்களாக வந்த சீகன்பால்க், சுவார்ட்ஸ் போன்றோரின் துணிவும், வைராக்கியமும் நாம் மறக்கமுடியாதே.

**மாணிக்கம்:** தானியேலின் புத்தகம் வேறு என்ன கற்றுக் கொடுக்கிறது?

**சாலமோன்**: கடவுளின் ஆற்றலை நம்பும் மூவர் (சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ) ஆகியோரின் தைரிய வார்த்தைகள் எனக்கு எப்போதும் அறைகூவல் கொடுக்கும். அந்த நாளைய மாமன்னரான நேபுகாத்நேச்சார் அவர்களிடம் "அக்கினிச் சூளையிலிருந்தும், என் கையிலிருந்தும் தப்புவிக்கப் போகிற தேவன் யார்?" என்னும் கேள்விக்கு, "நாங்கள் ஆராதிக்கும் எங்கள் தேவன் தப்புவிக்க வல்லவர் – அவர் தப்புவித்து விடுவிப்பார். அவர் விடுவிக்காமல்



போனாலும், நாங்கள் உம்முடைய சிலையை வணங்கமாட்டோம்" என்ற பதில்தான் அது.

அருட்பணிக்கு ஒருபுறம் துணிவும் வைராக்கியமும் இருந்தாலும், மறுபக்கம் கடவுளின் வல்லமையில் நம்பிக்கை. அந்த நம்பிக்கை அவர்களை அக்கினிச் சூளையிலிருந்து காப்பாற்றியது.

**ஜான்:** தானியேலையும் அந்த நம்பிக்கை சிங்கக்குகையிலிருந்து காப்பாற்றியதல்லவா?

**சாலமோன்**: அந்தப் பகுதி அருட்பணிக்குத் தேவையான ஜெபத்தை நமக்குக் கூறுகிறது. அரசரின் ஆணை கையெழுத்து வைக்கப்பட்டது அறிந்தும், தானியேல் "முன்பு செய்துவந்தபடியே மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம் பண்ணினார் (தானி 6:10). சீன உள்நாட்டு மிஷனைத் தோற்றுவித்த ஹட்சன் டெய்லரின் ஜெப வாழ்வை அவர் மகன்



கூறும்போது, " சீனாவில் என் தகப்பனாரின் காலை ஜெபத்திற்கு முன்பாக சூரியன் உதித்ததில்லை" என்று கூறுவாராம்.

**மாணிக்கம்:** உலகின் பல்வேறு நாடுகளில் இயேசுவைப் பின்பற்றுவோர் துன்பப் படுத்தப்படுகின்றனர்.

இப்போது இந்தியாவிலும் அது பரவி வருகிறது. அதற்கு தானியேலின் புத்தகம் என்ன சொல்லும்?

**சாலமோன்**: நம்பிக்கையை இழக்க வேண்டாம் என்று கூறும். கம்யூனிச ஆட்சி சீனாவில் வந்தபோது எல்லா வெளி நாட்டு அருட்பணியாளர்களும் வெளியேற்றப் பட்டனர். ஆனால் உறுதியான சீன கிறிஸ்தவர்கள் துன்புறுத்தலுக்கு நடுவே இயேசுவின் சாட்சிகளாக மாறினர். உலகிலே அதிகமாக வளரும் சபை சீனாவில் உண்டு என்று கூறுகிறார்கள்.

ஒருவகையில் இயேசுவின் முதல் வருகையால் இரட்சிப்பு என்னும் மீட்பு கிடைத்தது. அவரின் இரண்டாம் வருகையில் நீதி கிடைக்கும். அழியாத ஓர் இறையரசு உருவாகும். இதுதான் நமது நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அழகாக எடுத்துரைக்கிறது தானியேலின் புத்தகம். நேரமாகிறது. அடுத்தவாரம் சந்திப்போம்.

**ஜானும், மாணிக்கமும்:** ரொம்ப நன்றி சார். சந்திப்போம்.

அடுத்த மாதமும் தொடருவோம்...

**ஆத்துமாக்களின் மீது கரிசனையுள்ள இதயத்தில் மன்னிப்புகளுக்குப் பஞ்சமில்லை.**

வாலிபர் பகுதி

# நீயும் எங்களோடே வா!

திரு. சந்தோஷ் கணேசன்

வேதாகமத்தில் நாம் கவனிக்க மறந்த சில மனிதர்களில் 'ஓபா' என்பவர் ஒருவர். இவரைக் குறித்து எண்ணாகமம் 10:29 - 32 வரையுள்ள வசனங்களில் வாசிக்க முடியும். சில வசனங்கள்தான் இவரைக்குறித்து பேசுகிறது என்றாலும் இந்த சம்பவத்திலிருந்தும் ஆண்டவர் நம்மோடு பேச முடியும்.

**யார் இந்த ஓபா?**

வசனம் 29ன்படி இவர் மோசேயின் மைத்துனர் ஆவார். மீதியான் பகுதியைச் சேர்ந்தவர். இஸ்ரவேல் அல்லாத வேறு இனத்தவராக இந்த ஓபா இருந்தாலும் கர்த்தரால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் செல்லும் வனாந்திரப் பயணத்தில் மோசேக்கும், மக்களுக்கும் வழிகாட்டியாக, உதவியாக இருந்தார் என்பதை வாசிக்கிறோம்.

**ஆண்டவரின் அருட்பணியில் ஓபாவின் பங்கு**

தாங்கள் வேறோரு பகுதிக்கு செல்வதற்கு முன், ஓபாவிடம், தொடர்ந்து நீயும் எங்களோட வா என்று மோசே கேட்கிறார். ஆனால், ஓபா வர முடியாது என்று மறுக்கிறார். அதற்கு, அவர் இரண்டு காரணங்கள் சொல்கிறார்,

1. என் தேசத்துக்குப் போக வேண்டும்.

2. என் இனத்தாரிடத்துக்குப் போகவேண்டும்

"அதற்கு அவன்: நான் வரக் கூடாது; என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போகவேண்டும் என்றான்." (எண் 10:30)

இவ்வாறு ஓபா சொன்னதற்குக் காரணம், ஆண்டவரின் மாபெரும் திட்டத்தில் தன்னுடைய பங்கு எவ்வளவு முக்கியமானது என்று அவர் உணரவில்லை. தன்னுடைய ஊரையும் சொந்தபந்தங்களையும் மட்டுமே முக்கியமாக நினைத்துக் கொண்டிருந்தார். அதனால்தான் நான் திரும்பிப் போக வேண்டும் என்று சொல்கிறார்.

இன்று நம்மில் அநேகர் இப்படிப்பட்ட உறவுச்சிக்கல்களுக்குள் சிக்கிக் கொள்கிறோம். அருட்பணி என்பது உலகளாவிய உன்னதப்பணி. ஆனால், அதை மிக எளிதாக உறவுகளுக்காக விட்டுக் கொடுத்துவிடுகிறோம். உன்னதப் பணியா? உறவுகளா? என்றால், அருட் பணியின் அவசரத்தை உணர்ந்தவர்கள் உன்னதப்பணியைத்தான் தேர்ந் தெடுப்பார்கள்.

ஆனால், ஓபாவின் பணி எவ் வளவு முக்கியம் என்பதை எடுத்துக் கூறி, மறுபடியும் கூடவரும்படி மோசே கேட்டுக் கொள்கிறார். அப்போது மோசே சொன்ன காரியத்தைக் கவனிப்போம்.

"அப்பொழுது மோசே: நீ எங்களை விட்டுப் போகவேண்டாம்; வனாந்தரத்திலே நாங்கள் பாளயமிறங்கும் இடங்களை நீ அறிந்திருக்கிறபடியினால், எங்களுக்குக் கண்களைப்போல இருப்பாய்." (எண் 10:31)

ஓபா, இஸ்ரவேல் மக்களுக்குக் கண்களைப் போன்று இருக்கிறார் என்பதை மோசே சொன்னதன் மூலம் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆண்டவரின் மகாப் பெரிய திட்டத்தில் பல லட்சம் இஸ்ரவேல் மக்களுக்கு இந்த ஓபா கண்களைப் போன்று இருக்கிறார் என்பதை மோசே அவருக்குப் புரிய வைக்கிறார். அதன் பிறகு ஓபா வர மாட்டேன் என்று சொன்னதாக வேதாகமத்தில் இல்லை.

**ஆண்டவரின் அருட்பணியில் நம்முடைய பங்கு**

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே! ஆண்டவரின் அருட்பணி திட்டத்தில் உங்களது பங்கும் முக்கியமானது. நீயும் முக்கியமானவன்/ள். ஒருவேளை உங்களுடைய பங்கு எவ்வளவு முக்கியம் என்பதை ஓபாவைப் போல நீங்களும் இதுவரை உணராமல் இருக்கலாம்.

எனக்கு என் சொந்தம் முக்கியம், ஊர் முக்கியம், என்னுடைய விருப்பப்படி நான் முடிவு எடுப்பேன் என்று ஒருவேளை நீங்களும் சொல்லலாம். ஆனால், நீங்களும் ஆண்டவரின் திட்டத்தில் கண்களைப் போன்றவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

ஓபாவிற்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை உங்களுக்கும் ஆண்டவர் தனது அருட்பணித் திட்டத்தில் பங்கு கொள்ளக் கொடுக்கிறார் **’நீயும் வா’.** ஓபாவைப் போல் காரணம் சொல்லி இந்த உன்னதமான அழைப்பைத் தள்ளிவிட முயற்சி செய்யாதே!

ஆனாலும், அவர் மோசேக்குக் கீழ்ப்படிந்து, இஸ்ரவேலரோடு குடும்பமாகத் தங்கியிருந்ததை நியாயாதிபதிகள் 1:6 மற்றும் 4:11 ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம்.

தமிழ்நாட்டிற்கு நற்செய்தி கிடைத்து, 2000 ஆண்டுகள் கடந்தபின்பும், தமிழ்நாட்டிலேயே இன்னும் நற்செய்தி சென்றடையாத மக்கள் இனங்கள் உண்டு.

இன்னும் ஆண்டவர் இயேசுவைப் பற்றி கேள்விப்படாத 2032 மக்கள் இனங்கள் நம் இந்தியத் திருநாட்டில் உள்ளன.

புதிய சிந்தனை, மாற்றங்களை ஏற்கும் மனநிலை, துணிச்சல் மற்றும் நீண்டநேரம் உழைக்கும் ஆற்றல் கொண்டது வாலிப வயது. “நானே வழி” என்று சொன்ன நம் ஆண்டவரை, இத்தனை மக்கள் கூட்டங்களுக்கு அறிவிக்க, இந்த வாலிபர்கள் அதிகம் தேவை.

உன்னுடைய தனித்திறமையை அவரின் பணிக்காகத் தருவாயா? நரகத்தின் வாசல்கள் தேடி கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் விரைந்து கொண்டிருக்கும்போது, விடுதலைதரும் நற்செய்தியை ஒவ்வொரு வாரமும் கேட்டுக்கொண்டு, நிர்விசாரமாக வாழ்வது எந்தவிதத்தில் நியாயம்.

பல லட்ச இஸ்ரவேல் மக்களை கானானுக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக இருந்த ஓபாவைப் போல நீயும் பாவத்தால் அழிந்துபோகும் வாலிப சமுதாயத்தை இயேசுவின் பக்கம் கொண்டு செல்லும் வழிகாட்டியாக முன் வருவாயா?

**ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிறவன் ஞானமுள்ளவன்.**
**நீங்கள் ஞானமுள்ளவர்களா?**

## 2026 ஜனவரி மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
ஷீலா சுரேஷ்
கலா செல்வகுமாரி
ஜேனட் கமலாபாய்
ஆசீர்வாதம்
தெல்மா ஸ்டான்லி
ஜெர்லி இம்மானுவேல்
டேவிட் ஜெயச்சந்திரன்
ஞானசிரோன்மணி
ஹேமலதா வில்சன்
ரஜினி பியூலா ஷோபிகா
பீலோ சாமுவேல்
சுசீலாஆபிரகாம்
வினோதினி
ஜான்சி காமராஜ்
பங்கஜம் மார்த்தாண்டம்
சம்பு ஜெயச்சந்திரன்
அருள்மொழி ஜான்சன்
குளோரி ஸ்டீபன்
வெற்றிச்செல்வி
ராணி ஸ்டான்லி பால்
ஜெயராணி மோகன்
ஜெமி ஸ்டீபன்
மனோகராஜ்

**கன்னியாகுமரி**
செல்வராஜ்
பமீலா எட்வின்
ரெத்னா ராஜ்குமார்
தேவசகாயம்
மோகன் சி கமலம்
பியூலா ஜான்சன்
லில்லி புஷ்பம்
பிராகரன்ஸ் தங்கராஜ்
எப்சிபா றசல்
அருளப்பன்
லீலா அய்யாக்கண்
ஜெபஜோதிபாய்
பிரேமா ஜெரால்டு
பியூலா பால்ராஜ்

**திருநெல்வேலி**
லதா
வயலட் கிறிஸ்டோபர்
ஜேன் தர்மராஜ்
சாந்தி ராஜன்
ரூத் கமலம்
தாமஸ்
ஹெலன் ஸ்வீட்
ரோஸலின் ஜோசப்
ஜான்சி சந்தியா
சந்திரலீலா திரவியம்
ஜெபா நியூட்டன்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
வசந்தா பாலசேகரன்
செல்வராஜ்
லில்லி செல்வராஜ்
சுந்தரி ஸ்டீபன்
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
கிளாடிஸ் ராஜையா
நூர்ஜி
கஸ்தூரி எலியாஸ்
ஞானசுந்தரி நாகராஜன்
வில்லியம் பிரெடெரிக்
சூர்யகுமாரி பிரின்ஸ்
சந்திரபோஸ்
மேரி ஜோசப்
பத்மா ராஜையா
ஜெயசிங்
செல்வி பொன்னரசி
அன்பு டேனியல்
பெட்ரிசியா ஜஸ்டஸ்
ரஜுலா செல்வின்
ஜெயகுமார் காலேப்
சந்திரா தாமஸ்

**தூத்துக்குடி**
சாந்தகுமாரி
ஆதிசிரோன்மணி ஞானதீபம்
ஷேபா கோயில்பிச்சை
ஸ்டான்லி ராஜாமணி
தேவகிருபை
கிருபாசனம் ரெமீஜீயஸ்
ஆலீஸ் குணசீலி
மனோகரம் ஜான்சன்
ஞானமணி எப்சிபா
அன்னத்தாய் ஆல்பர்ட்
ரூபவல்யா
ஹெலன் திலக்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
ரெத்னாவதி முத்துராஜ்
ஜாய்ஸ் ஜான்சன்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
ஆனி இன்பநாயகம்
அமிர்தகனி
தியாகராஜன்
சந்திரா ஜெயராஜ்
செல்லமணி ஆல்பர்ட்
பாக்கியராஜ்
புஷ்பராணி ஜேம்ஸ்
ஜோதிமணி வில்சன்
லீலா டேவிட்சன்

**சென்னை**
ஹெப்சிபா தாமஸ்
செலின் ராணி டேவிட்
யூனிஸ் ரிச்சர்ட்
டேவிட் ஜெயக்குமார்
சாந்தி டென்னிசன்
துரைராஜ்
சைமன் கலைச்சந்திரன்
ரோஹிணி ஜேசன்
அன்னாள் ஜான்
ஜெயமேரி சந்திரசேகரன்
கனகா வேணுகோபால்

**திருச்சி**
ஜெபசீலி ஜெயக்கொடி
ராணி
சூசன்னா
லில்லியன் ஜோசப்
திலீப்குமார்
சிசிலியா ஜெயபிரகாஷ்
டேவிட்
ஜெபமணி டேவிட்

**கோயம்புத்தூர்**
அருணோதயம் வில்லியம்
கிறிஸ்டிபாய் வாசன்
பீட்டர்
தனபால் சின்னக்கண்ணு
ஜான்சி
வசந்த மல்லிகா
ஈவ்லின் மோகன்

**தேனி**
எலிசபெத் பால்ராஜ்
பொன்ராணி அன்புநாதன்
சுசீலா ஜான்
மாலா வில்சன்
நேசமணி சாமுவேல்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
பிரமீளா செல்வம்
சிந்தி ஜாஷ்வா
ஜோசப்பின் செல்லத்தாய்
ரோஸலின் செல்வராணி

**சிவகெங்கை**
பாலின் மார்டின்
அன்பு கமலம்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
ரூத் நேசமணி
இமாகுலேட்
ஜெயகுமாரி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
லதா கிரேஸ்
சூர்யா ரிச்சர்ட்சன்
சில்வியா ராஜகுமாரி

**நீலகிரி**
சோபியா நரேந்திரன்
ஜாய்ஸ் ஸ்டீபன்ராஜ்

**சேலம்**
இவாஞ்சலின் ஜோன்ஸ்
அனிதா குமாரி
பழனியம்மாள் சாமிநாதன்
ரோலண்ட் அருள்ராஜ்

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி

**விருதுநகர்**
சமாதானம் பீட்டர்
பொன்னுத்தாய் ராஜேந்திரன்
பிளாரன்ஸ் ராஜமோகன்
லீலாவதி பால்சிங்

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

**திண்டுக்கல்**
கெத்ஸி எலிசபெத்
குளோரி மனோகர்
பால் சின்னத்தம்பி

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

**வேலூர்**
மெர்ஸி புளோரா

# வேத வினாக்கள் பிப்ரவரி - 2026

(ரோமர்: 9 முதல் 16 அதிகாரங்கள் வரை)

**பொருத்துக**

1. நயவசனிப்பு – உற்சாகம்
2. நற்கிரியை – நன்மை
3. இரக்கம் – சாரம்
4. தீமை – இச்சகப்பேச்சு
5. வேர் – துர்க்கிரியை

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. நம்பிக்கையின் தேவன் ..... உண்டாகும் எல்லாவித ..... ..... உங்களை .....
2. கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற ..... ..... வாழ்த்துங்கள்.
3. தேவனுடைய இராஜ்யம் ..... ..... அது ..... ..... பரிசுத்த ஆவியினாலுண்டாகும் .....
4. ..... சந்தோஷமாயிருங்கள் ..... பொறுமையாயிருங்கள் ஜெபத்திலே ..... .....
5. ..... தேடாத ..... நீதியை அடைந்தார்கள் அது ..... .....

**விடை எழுதுக**

1. பவுலின் இனத்தார் யாவர்?
2. பெபேயாள் யார்?
3. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக எவைகளைப் போடலாகாது?
4. மாறாதவைகள் எவை?
5. பவுலின் இருதய விருப்பம் என்ன?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**வேதவினா விடை,**
**வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

ஜனவரி மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!

1. திருமதி. **பமீலா எட்வின்** – **கன்னியாகுமரி**
2. திருமதி. **ஜெயராணி மோகன்** – **மதுரை**
3. திருமதி. **அனிதா குமாரி** – **சேலம்**

# நடப்புச் செய்திகள்

**இந்தியாவின்** பொருளாதார வளர்ச்சி 2025-26 நிதி ஆண்டில் 6.6% ஆக இருக்கும் என முன்பு கணித்திருந்த சர்வதேச நாணய நிதியம், அதை தற்போது 7.3% ஆக உயர்த்தி கணிப்பை வெளியிட்டுள்ளது. உலகப் பொருளாதார கண்ணோட்டம் ஜனவரி 2026 அறிக்கையை, சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது. அதில், உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பாக புள்ளி விவரங்களின் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியம் தனது கணிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, உலகின் பொருளாதார வளர்ச்சி 2026-ம் காலண்டர் ஆண்டில் 3.3% ஆக இருக்கும் என்றும், 2027-ல் இது 3.2%ஆக குறையும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 2025-ல் உலக பொருளாதார வளர்ச்சி 3.3% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டதோடு ஒப்பிடுகையில், வளர்ச்சியில் பெரிய மாற்றம் இருக்காது எனத் தெரிகிறது. நாடுகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதங்களும் மாறுபடுகின்றன. 2025-ம் காலண்டர் ஆண்டில் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி 2.1% ஆகவும், 2026-ல் இது 2.4% ஆகவும், 2027-ல் 2% ஆகவும் இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. 2025-ம் காலண்டர் ஆண்டில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 5% ஆக இருக்கும் என கணித்துள்ள சர்வதேச நாணய நிதியம், 2026-ல் இது 4.5% ஆகவும், 2027-ல் 4% ஆகவும் குறையும் என கணித்துள்ளது. 2025-ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.30% ஆக இருக்கும் என கணித்துள்ள சர்வதேச நாணய நிதியம், 2026-ல் இது 6.40% ஆகவும், 2027-ல் 6.40% ஆகவும் இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. மூன்றாவது காலாண்டில் எதிர்பார்த்ததைவிட இந்தியாவின் செயல்பாடு சிறப்பாகவும், வலுவாகவும் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

**பேங்காக்**: சீனாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 140.4 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டை விட 30 லட்சம் குறைவாகும். 2025-ஆம் ஆண்டில் பிறந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை வெறும் 79.2 லட்சமாக மட்டுமே பதிவாகியுள்ளது. இது முந்தைய 2024-ம் ஆண்டை விட 16.2 லட்சம் அதாவது 17 சதவீதம் குறைவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து 2024-இல் பிறப்பு விகிதத்தில் தென்பட்ட சிறிய முன்னேற்றம் ஒரு நிலையான மாற்றம் அல்ல என்பது தெரியவந்துள்ளது. சீனா பல தசாப்தங்களாக "ஒரே குழந்தை" கொள்கையைப் பின்பற்றியது. இப்போது மக்கள் தொகை சரிவைத் தடுக்க, 2015-ல் 2 குழந்தைகளுக்கும், 2021-ல் மூன்று குழந்தைகளுக்கும் சீனா அனுமதி அளித்தது. குழந்தை பெறுவோருக்கு ஊக்கத் தொகையும் அளித்தது. எனினும் குழந்தை பிறப்பு சரிந்துள்ளது.

**சென்னை**: திறந்தநிலை பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்றவர்கள் பி.பார்ம், டி.பார்ம், பார்ம்.டி படிப்புகளில் சேரலாம். மத்திய, மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் மட்டுமே மருந்தியல் படிப்புகளில் சேர்ந்து வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு, மருந்தியல் கவுன்சில் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதன்படி, மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்ற திறந்த நிலைப் பள்ளிகளில் படித்து தேர்ச்சி பெற்றவர்களும் பி.பார்ம், டி.பார்ம், பார்ம்.டி படிப்புகளில் சேரலாம் என்று தெரிவித்திருந்தது. ஆனால், பெரும்பாலான கல்லூரிகளில் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இந்நிலையில், அறிவுறுத்தலை மீண்டும் வலியுறுத்தும் வகையில், அனைத்து மாநில அரசுகளுக்கும், மாநில மருந்தியல் கவுன்சில்களுக்கும் இந்திய கவுன்சில் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில், விதிகளின்படி திறந்தநிலைப் பள்ளி மாணவர்களையும் இளநிலை மற்றும் பட்டய மருந்தியல் படிப்பில் அனுமதிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மும்பை**: மகாராஷ்டிர தலைநகர் மும்பையின் தெற்கு பகுதியில் உள்ள 7 தீவுகளில் ஒன்று மசாகோன். இந்த பகுதியை சேர்ந்த ஒருவரிடம் 1977-ம் ஆண்டு, 2 மர்ம நபர்கள் 7 ரூபாய் 65 பைசாவை பறித்துச் சென்றனர். பாதிக்கப்பட்ட நபர் உள்ளூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். இதுதொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்து 2 மர்ம நபர்களை தேடி வந்தனர். சுமார் 50 ஆண்டுகளாகியும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இந்த வழக்கின் விசாரணை மசாகோன் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த சூழலில் மசாகோன் நீதிமன்றத்தில் அண்மையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது மாஜிஸ்திரேட் ஆர்த்தி குல்கர்னி கூறியதாவது: கடந்த 50 ஆண்டுகளாக வழக்கு நீடிக்கிறது. வழக்கை தொடுத்த புகார்தாரர் உயிரோடு இருக்கிறாரா? ஏழு ரூபாயை திருடிய மர்ம நபர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பது போலீஸாருக்கு தெரியவில்லை. வழிப்பறி செய்யப்பட்ட தொகை ரூ.2,000-க்கு குறைவாக இருப்பதால் சுருக்க விசாரணை மூலம் விரைவாக வழக்கு முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. இதுபோன்ற வழக்குகளால் நீதிமன்றத்தின் சுமை அதிகரிக்கிறது. எனவே, வழக்கு ரத்து செய்யப்படுகிறது. புகார் தாரர் உயிரோடு இருந்தால் அரசு தரப்பில் அவருக்கு ரூ.7.65-ஐ வழங்க வேண்டும். இவ்வாறு மாஜிஸ்திரேட் ஆர்த்தி உத்தரவிட்டார். 7.65 ரூபாயை பறிகொடுத்த நபர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸாரின் அலட்சியம், கவனக்குறைவால் சுமார் 50 ஆண்டுகள் வரை வழக்கு நீடித்திருக்கிறது. இவ்வாறு சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (19,20/01/2026)

# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

58,1. முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை-73

9442150482 email: contacticgm@gmail.com


## குருணைக்கல்பட்டி ஆலய மறுகட்டுமானப் பணிக்காக...

பிப்ரவரி 2026.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகள்.

குருணைக்கல்பட்டியைச் சேர்ந்த ஒருவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, இறையியல் கல்வி முடித்தபின்பு, இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனில் அருட்பணியாற்ற இணைந்தார். அதன்பின் அவருடைய சொந்த கிராமமான குருணைக்கல்பட்டிக்கே நற்செய்தி அறிவிக்க அனுப்பப்பட்டார்.

அவர் மூலமாக அநேகர் இந்தக் கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். ஊழிய வளர்ச்சியின் காரணமாக, 1999ஆம் ஆண்டு இந்தக் கிராமத்தில் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. 50 குடும்பத்தினர் இங்கு ஆராதனையில் கலந்து கொள்கின்றனர்.

ஆலயம் கட்டப்பட்டு 25 வருடங்களாகியதால், பழுதான சுவர் மற்றும் எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ள மேற்கூரை போன்ற காரணங்களினால், ஆலயத்தை முற்றிலுமாக இடித்துவிட்டு, மீண்டும் கட்டத் தீர்மானித்து அதற்காக ஜெபித்து வருகிறோம். இந்த மறு ஆலயக்கட்டுமானப்பணிக்கென உங்களுடைய உதாரத்துவமான உதவியை எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆலயக்கட்டுமானப்பணியின் தேவையை சந்திக்கும்படி உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்.

அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்.

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 11194454531**
**Bank : State Bank of India**
**Branch Name : Vinayaga Nagar, Madurai.**
**IFSC Code : SBIN0001479**

ஆன்லைனில் மறு ஆலயக் கட்டுமானப் பணிக்கு அனுப்புபவர்கள் மேலே உள்ள வங்கிக்கணக்கிற்கு அனுப்பி 9442150482 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS)அனுப்பவும்

**நம்முடைய தேவை ரூபாய் இருபது (ரூ. 20.00) இலட்சமாகும்**



Registered with RNI Under No:TNTAM/2000/01585
Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026
Posted at BPC Madurai - 625 001.
Date of publishing: 28th January 2026 Date of posting - 28,29 & 30th January 2026.
Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.

# அறுவடைக்கு ஆட்கள் தேவை



கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பரி.தோமா இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். ஆனால், 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்கள் மற்றும் ஏறக்குறைய 800 (தமிழ்நாட்டில் 38 மாவட்டங்கள்) மாவட்டங்கள் கொண்ட நம்நாட்டில் ஆத்துமாக்கள் அறுவடைக்கு இன்னமும் அளவில்லாமல் காத்திருக்கின்றன.

ஆனால், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியதுபோல, அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்ற நிலைதான். இந்த நிலை மாறவும், ஆத்துமாக்களின் கரிசனை கொண்டோரை வரவேற்கவும், இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் எப்போதும் ஆயத்தமாகவுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றி பேசும் நாம், அவருடைய முதலாம் வருகையை அறியாத மக்கள் கூட்டங்கள் நம்மைச் சுற்றிலும் இருப்பதைக் கவனித்தால் நல்லதல்லவா? உலகிலுள்ள பணிகளிலேயே உன்னதமான இந்த அருட்பணியைச் செய்வதற்கு அர்ப்பணித்துள்ள உங்களை இருகரம் நீட்டி வரவேற்கிறோம். உங்களுடைய சுயவிபரங்கள் மற்றும் புகைப்படத்தை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம்.

வாருங்கள் அனைவரும் இணைந்து இயேசு கிறிஸ்துவின் விண்ணரசை இப்புவியில் கட்டிடுவோம். விண்ணரசின் மகிழ்ச்சியைக் கூட்டிடுவோம்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**பொதுச்சேவகர்,**
**இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன், 58/1. முத்தாலம்மன் கோவில் தெரு, சேலையூர், தாம்பரம், சென்னை. 600073.**
**அலைபேசி: 9003916482 மின்னஞ்சல்:** contacticgm@gmail.com

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street, Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.**
**Cell : 94459 24440**

icgm1014@sbi

ICGM

**To:**